# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, ஓகத்து மாதம் 01 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்

[2003 யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.– ஒ $\frac{30/2000}{4735}$

**விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகளை மத்தியஸ்தத்துக் கூடாகத் தீர்த்துவைப்பதற்கான மத்தியஸ்த சபைகளைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட மற்றும் அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டமானது 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*எவ்விடயமும் கருமங்களும் தொடர்பில் சட்டம் ஏற்புடையதாகுமோ அவ்விடயமும் கருமங்களும்.*

**2.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள் மத்தியஸ்த மூலமாகத் தீர்த்துவைப்பது தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) அத்தகைய வகுதிகளைக் குறித்துரைக்கையில் அமைச்சர் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அர்த்தமுள்ள பிணக்குத் தீர்வுக்கு ஏற்பாடுசெய்ய வேண்டியதன் அவசியம் பற்றிக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

*விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புகள்.*

**3.** இரண்டாம் பிரிவின்கீழ்த் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் (இதனகத்துப்பின்னர் "விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் எந்த இடப்பரப்புக்குள்ளாகப் பிணக்குகள் தீர்த்துவைக்கப்படவேண்டுமோ அந்த இடப்பரப்பை அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், காலத்துக்குக்காலம், குறித்துரைத்தல் வேண்டும்.

மத்தியஸ்தர் குழாத்தை நியமித்தல்.

4. (1) மூன்றாம் பிரிவின்கீழான கட்டளையொன்று வெளியிடப்பட்டதன்மீது மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு விசேட மத்தியஸ்த சபை தொடர்பாகவும் (இதனகத்துப்பின்னர் "குழாம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மத்தியஸ்தர் குழாமொன்றை, அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து, நியமித்தல் வேண்டும். இச்சட்டத்துக்கான அட்டவணையில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் குழாத்தின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பாகவும் நியமித்தல் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) குழாத்தின் உறுப்பினர் ஒருவராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராக இருக்கவேண்டிய ஆள் ஒருவர், 2 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் பிணக்குகளினது வகுதிகளின் தன்மையைக் கருத்துக்கெடுத்து அத்தகைய குழாத்துக்கு நியமிக்கப்படவேண்டிய உறுப்பினர்கள் கொண்டிருக்க வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படும் நிபுணத்துவத்தை, அத்தகைய தகைமைகளை விதித்துரைக்கும்போது கருத்துக்கெடுத்து அமைச்சரினால், அந்நோக்கத்துக்கென விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் எனத் தேவைப் படுத்துதல் வேண்டும். அப்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும் வெவ்வேறு வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் வெவ்வேறு தகைமைகள் விதித்துரைக்கப்படலாம்.

(3) மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, ஒவ்வொரு விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புத் தொடர்பிலும் நியமிக்கப்பட்ட குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரை அத்தகைய குழாத்தின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

குழாத்தின் உறுப்பினர்களின் பதவிக்காலமும் அவர்களுக்குக் கொடுபடற்பால தான ஊதியமும்.

5. (1) குழாத்தின் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகிப்பார்; அத்துடன் அதன்பின்னர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(2) குழாத்தின் உறுப்பினர் ஒருவருக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

குழாத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்.

**6.** மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு குழாத்தின் உறுப்பாண்மையில் ஏற்படும் எவையேனும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நியமனங்களைச் செய்யலாம். அத்துடன் அவ்வாறு நியமிக்கப்படும் ஒவ்வோராளும் அவர் எவ்வுறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

விசேட மத்தியஸ்த சபைகளின் நியாயாதிக்கம்.

**7.** (1) இரண்டாமுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட பிணக்குகளினது வகுதிகளுள் ஏதேனுமொன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பாக எழுகின்றதும், அத்தகைய விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பரப்புக்குள்ளாக முழுமையாக அல்லது பகுதியளவில் எழுகின்றதுமான ஏதேனும் பிணக்கை மத்தியஸ்தமூலம் தீர்த்துவைப்பதற்காக, ஆளொருவர் ஏதேனும் விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம் :

ஆயின், அத்தகைய தவிசாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கு –

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை உட்படுத்துகின்றவிடத்து அத்தகைய அசைவுள்ள ஆதனம் வைத்திருக்கப்படும் அல்லது அசைவற்ற ஆதனம் அமைந்துள்ள விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு அவ்விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒப்பந்தமொன்றை உட்படுத்துகின்றவிடத்து அத்தகைய, ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ள விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு அவ்விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) நீதிமன்றத்தில் வழக்குக் காரணமொன்றாக அமையும் கருமமொன்றை உட்படுத்துகின்றவிடத்து அத்தகைய வழக்குத் தொடர்பில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிமன்றத்தின் ஆள்புல எல்லைக்குள்ளாக விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு அவ்விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட கட்டணமானது விதித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்தப்பட்டுள்ளதென்ற நிகழ்வுக்குச் சான்றாகவமையும் ஆவணத்துடன் சேர்த்துச்செய்யப்படுதல் வேண்டும்.

இணக்கப்படாமை பற்றிய சான்றிதழ் ஒன்றில்லாமல் வழக்கு எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

**8.** (1) விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்று தொடர்பில் இச்சட்டத்தின்கீழ்க் குழாம் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக் கப்படவேண்டியதான அத்தகைய பணத்தொகையிலும்பார்க்க அத்தகைய பிணக்குக்கான விடயப் பொருளின் பணப்பெறுமதி குறைவானதாக இருக்கின்றவிடத்து, 2 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் ஒரு வகுதியை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள் தொடர்பாக அத்தகைய இடப்பரப்புக்குள்ளாக முழுமையாக அல்லது பகுதியளவில் எழும் ஒரு பிணக்குத் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் எவையும், 14 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட இணக்கப்படாமை பற்றிய சான்றிதழ் ஒன்றுடன் சேர்த்துச்செய்யப்பட்டிருந்தாலன்றி, முதனிலை நீதிமன்றத்தில் தொடரப்படுதலாகாது அல்லது நீதிமன்றத்தினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

(2) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு பிணக்குக்கான திறத்தவர், குடியியல நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் V ஆம் பாகத்தின்கீழான ஏதேனும் தற்காலிகப் பரிகாரம் என்ற படிவத்திலான நிவாரணத்தை வேண்டுகின்றவிடத்து, அல்லது 7 ஆம் பிரிவின் எப்பிணக்குத் தொடர்பாக விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அப்பிணக்கு எதனதும் திறத்தவர் ஒருவர், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் V ஆம் பாகத்தின் கீழான தற்காலிக நிவாரணத்துக்கான வேண்டுதல் உட்பட, எப்பிணக்குத் தொடர்பாகப் பின்னர் ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுக்குமிடத்து, நீதிமன்றமானது அத்தகைய தற்காலிக நிவாரணத்தை வழங்குவதற்கு மாத்திரம் அது தொடர்புபட்ட அளவுக்கு அத்தகைய வழக்கை ஏற்றுக்கவனித்துத் தீர்மானிக்கலாம் ; அத்துடன் அவ்வாறு தீர்மானித்த பின்னர் —

(அ) அதன் முன்னர் வழக்குக் காரணமாக அமையும் பிணக்குத் தொடர்பாக 7 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் எதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய பிணக்கை மத்தியஸ்தத்துக்கெனத் தோதான குழாத்தின் தவிசாளருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ) அட்டவணைக்குத் தொடர்பாக 7 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளவிடத்து, சபை எதுவும் அமைத்துருவாக்கப்படாதவிடத்து தோதான குழாத்தின் அல்லது விடயத்துக்கேற்றாற்போல, தோதான சபையின் தவிசாளரை, அப்பிணக்குத் தொடர்பான மத்தியஸ்தத்தைத் தொடருமாறு பணித்தல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், எந்தப் பிணக்குத் தொடர்பாக விண்ணப்பஞ்செய்யப்படுகிறதோ அந்தப் பிணக்கின் விடயப்பொருளின் பணப்பெறுமதி இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சினாலொழிய, 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்தியஸ்த சபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதிலிருந்து பிணக்குக்கான எவரேனும் திறத்தவரைத் தடைப்படுத்தல் ஆகாது.

9. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் ஒரு வகுதியை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் எழும் ஏதேனும் பிணக்குத் தொடர்பாக விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள ஏதேனும் குடியியல் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளவிடத்து, அல்லது விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றின்மீது நியாயாதிக்கம்கொண்டுள்ள ஏதேனும் தொழில் நியாயசபைக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய நீதிமன்றம் அல்லது நியாயசபை அப்பிணக்குக்கான திறத்தவர்களின் எழுத்திலான சம்மதத்துடன், மத்தியஸ்தத்தின் மூலம் அத்தகைய பிணக்கைத் தீர்த்துவைக்கும் நோக்கத்துக்காக, அந்த விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு அப்பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்.

நீதிமன்றத்திலான அல்லது தொழில் நியாய சபையிலான ஆற்றுப்படுத்துகை.

மத்தியஸ்த சபையின் அமைப்பு.

10. (1) ஏழாம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகையின்மீது, தவிசாளர் மத்தியஸ்த சபையை அமைத்துக்கொள்ளவேண்டிய முறை பற்றிய அவர்களது விருப்புத்தெரிவுகளை, பிணக்குக்கான திறத்தவர்களிடமிருந்து நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் வெளிப்படுத்தப்பட்ட முன்னுரிமைகளுக்கு இணங்க, பின்வருவனவற்றுள் ஒன்றைச் செய்தல் வேண்டும் :—

(அ) இரண்டாமுட்பிரிவின்கீழ் மத்தியஸ்த சபையொன்றை அமைத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) மூன்றாமுட்பிரிவின்கீழ் முன்னரே அமைக்கப்பட்ட மத்தியஸ்த சபையொன்றைத் தெரிவுசெய்வதற்குப் பிணக்குக்கான திறத்தவர்களை அனுமதித்தல் வேண்டும்.

(2) பிணக்குக்கான திறத்தவர்கள் அனைவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மத்தியஸ்த சபையை அமைப்பதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கின்றவிடத்து, அந்த விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கான நியமிக்கப்பட்ட குழாத்திலிருந்து குழாத்தின் தவிசாளர், பின்வரும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட (இதனத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மத்தியஸ்த சபையொன்றை அமைத்தல் வேண்டும்.

(அ) பிணக்குக்கான திறத்தவர் ஒவ்வொருவரராலும் தெரிவுசெய்யப்படும் ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களால தெரிவுசெய்யப்படும் ஓர் உறுப்பினர் :

ஆயின், எவ்வாறாயினும், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குக்கான திறத்தவர்கள் அல்லது (ஆ) என்னும் பந்தியில் உடன்பட்டுக்கொள்ளமுடியாதவிடத்து, குழாத்தின் தவிசாளர் அவசியமான தெரிவைச் செய்தல் வேண்டும் :

ஆயின், மேலும், (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குக்கான எவரேனும் திறத்தவர் அப்பந்தியின்கீழ் தெரிவைச் செய்வதற்குத் தமக்குள்ள விருப்பமின்மையை எழுத்தில் தெரிவிக்கின்றவிடத்து, அத்தகைய தெரிவானது

குழாத்தின் தவிசாளரினால் இழுக்கப்படும் திருவுளச்சீட்டுமூலம் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய திறத்தவர், எக்காரணத்துக்காகவேனும், திருவுளச்சீட்டிழுப்புமூலம் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது உறுப்பினருக்கு ஆட்சேபனை தெரிவிக்கின்றவிடத்து, தலைவர் திருவுளச்சீட்டிழுப்புமூலம் மேலதிக தெரிவைச் செய்தல் வேண்டும்.

(3) எந்தப் பிணக்குத் தொடர்பாக விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்தல் செய்யப்பட்டுள்ளதோ அந்தப் பிணக்கை முன்னரே அமைக்கப்பட்ட சபைக்கு ஆற்றுப்படுத்துவதற்குத் தமக்குள்ள விருப்பத்தைப் பிணக்குக்கான திறத்தவர்கள் அனைவரும் தெரிவிக்கின்றவிடத்து, குழாத்தின் தவிசாளர், அந்த விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்திலிருந்து, தவிசாளரால் முன்னரே அமைக்கப்பட்ட, (தவிசாளரினால் நியமிக்கப்பட்ட பிரதான மத்தியஸ்தம் உட்பட) ஒவ்வொன்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ள சபைகளிடையேயிருந்து ஏதேனும் சபையைத் தெரிவுசெய்வதற்கு அனுமதித்தல் வேண்டும்.

(4) பிணக்குக்கான திறத்தவர்கள் அனைவரும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட மத்தியஸ்த சபைக்கு பிணக்கை ஆற்றுப்படுத்துவதற்கான விருப்பைத் தெரிவிக்கின்றவிடத்து, அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் (இதனகத்துப்பின்னர் "பிரதான மத்தியஸ்தர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சபையின் பிரதான மத்தியஸ்தராகச் செயலாற்றுதல் வேண்டும் :

ஆயின், குழாத்தின் தவிசாளர் சபையின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டவிடத்து, தவிசாளர் அதன் பிரதான மத்தியஸ்தராகச் செயற்படுதல் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்றாற்போல சபை அமைக்கப்பட்டதன்மேல் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன்மேல், குழாத்தின் தவிசாளர், எந்தப் பிணக்குத் தொடர்பாக விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்டதோ அந்தப் பிணக்கை மத்தியஸ்தமூலம் தீர்த்துவைக்கப்படுவதற்கென அத்தகைய சபைக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

சபையின் கடமைகள்.

**11.** பத்தாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பிணக்கு ஏதேனும் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, சட்டபூர்வமான எல்லா வழிகள்மூலமும் பிணக்குக்கான திறத்தவர்களை நல்லிணக்கத்தீர்வுக்குக் கொண்டுவருவதற்கும், அவரவர்களின் சம்மதத்துடன் இயலுமானவிடத்தெல்லாம், அப்பிணக்கு மீளச் சம்பவிப்பதனைத் தடுப்பதற்காக அவர்களுக்கிடையேயுள்ள மனத்தாங்கலுக்கான உண்மையான காரணத்தை அகற்றுவதற்கும் பெருமுயற்சி எடுப்பது அத்தகைய சபைக்குள்ள கடமையாதல் வேண்டும் ; அத்துடன் இந்நோக்கத்துக்காக —

(அ) குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஒன்றில் அனைவருமாக அல்லது தனித்தனியாக மத்தியஸ்தக் கலந்தாய்வுக்குச் சமுகந்தருமாறு சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கும் சபை அவசியமெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களுக்கும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கலந்தாய்வில் திறத்தவர்களுள் எவரேனும் சமுகமாயிருக்கத் தவறினால், சம்பந்தப்பட்ட அத்தகைய திறத்தவர் வருகைதராமைபற்றி, 14 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும் இணக்கப்படாமை பற்றிய சான்றிதழில் அல்லது நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் குறிப்பிடப்படுமென அத்தகைய அறிவித்தலில் தெரிவித்தலும் வேண்டும் :

(ஆ) சமுகந்தருமாறு அறிவிக்கப்பட்ட எவரேனும் ஆளை இணக்கத் தீர்வொன்றை எய்துவதற்கு உதவக்கூடிய எவரேனும் சாட்சிக்காரர்களை அல்லது எவையேனும் ஆவணங்களை ஏதேனும் அத்தகைய கலந்தாய்வுக்குக் கொண்டுவருமாறு தேவைப்படுத்துதல் வேண்டும் ;

(இ) இணக்கத்தீர்வுக்கு வருவதற்கு எத்தனை மத்தியஸ்தக் கலந்தாய்வுகள் அவசியமோ அத்தனை கலந்தாய்வு களைக் காட்டுதல் வேண்டும் ;

(ஈ) மத்தியஸ்த அமர்வுகளை நடாத்துவதில் அவதானிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விதித்துரைக்கப்பட்டவாறான நடைமுறைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(உ) மத்தியஸ்த அமர்வுகளை நடாத்துவதில் கொடுக்கப்பட்ட, சான்று, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அத்துடன் வெளிவிடப்பட்ட அல்லது கலந்துரையாடப்பட்ட வேறு எவையேனும் விடயங்கள் என்பன யாவும் தொடர்பில் அந்தரங்கத்தைப் பேணுதல் வேண்டும் ;

(ஊ) இணக்கத்தீர்வொன்றுக்கு வருவதற்கு அவசியமானதும் உதவியானதுமென சபை கருதுகின்ற சந்தர்ப்பங்களில் பிணக்குக்கான விடயப்பொருள் சம்பந்தமாக விசேட அறிவு அல்லது நிபுணத்துவம் கொண்டுள்ள எவரேனும் ஆளின் ஆலோசனையை அவசியமானவிடத்து பெறுதல் வேண்டும் ;

(எ) பிணக்குக்கான இரு திறத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான இணக்கத்தீர்வொன்றை எய்துவதற்குப் பெருமுயற்சி எடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) பிரிவு 15 இல் குறித்துரைக்கப்பட்ட காலஎல்லைக்குள்ளாக அதன் நடவடிக்கைகளை நிறைவுசெய்தல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில், 14 ஆம் பிரிவின்கீழ், விடயத்துக்கேற்றாற்போல, இணக்கப்படாமை பற்றிய சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது நீதிமன்றத்துக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. மத்தியஸ்தமூலம் இணக்கத் தீர்வுக்கெனச் சபை முன்னர் கொணரப்பட்ட பிணக்குக்கான திறத்தவர் ஒவ்வொருவரும் —

பிணக்குக்கான திறத்தவர்களுக்குள்ள கடமைகள்.

(அ) இணக்கத்தீர்வை எய்துவதற்கு இயைபானவையும் அவசியமானவையுமான எல்லா விடயங்களையும் பூரணமாகவும் நேர்மையாகவும் வெளிவிடுதலும் ;

(ஆ) மத்தியஸ்த அமர்வில் வெளிவிடப்பட்ட அல்லது கலந்துரையாடப்பட்ட அந்தரங்கத் தன்மைத்தான ஏதேனும் தகவலை, ஒரு சட்டநீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்பட்டால் தவிர, வெளிவிடுவதிலிருந்து தவிர்த்தலும்.

அவரது கடமையாதல் வேண்டும்.

இணக்கத் தீர்வு எய்தப்பட்டுள்ள விடத்து.

**13.** (1) பிணக்குக்கான திறத்தவர்கள் இணக்கத்தீர்வுக்கு உடன்படுகின்றவிடத்து, இணக்கத்தீர்வின் நியதிகள் எழுத்தில் வடிக்கப்பட்டு பிரதான மத்தியஸ்தரினாலும், அத்தகைய திறத்தவர்களினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும் : அத்துடன் சபையானது —

(அ) இணக்கத்தீர்வு 7 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின்மூலம் சபை முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் பிணக்கு தொடர்பிலானதாக இருக்குமிடத்து அதன் பிரதியொன்றை பிணக்குக்கான ஒவ்வொருவருக்கும் உடனடியாக வழங்குதல் வேண்டும் : அத்துடன்

(ஆ) இணக்கத்தீர்வு 9 ஆம் பிரிவின்கீழ் ஒரு நீதிமன்றத்திற்கு அல்லது ஒரு நியாயசபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்குத் தொடர்பிலானதாக இருக்குமிடத்து, அதன் பிரதியொன்றை விடயத்திற்கேற்ப அத்தகைய நீதிமன்றத்திற்கு அல்லது தொழில் நியாயசபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், பிணக்குக்கான திறத்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் பிரதியொன்றை வழங்குதலும் வேண்டும்.

(2) இணக்கத்தீர்வின் பிரதியொன்று (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்திற்கு அல்லது தொழில் நியாயசபைக்கு அனுப்பப்பட்டுமிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய நீதிமன்றம், அல்லது தொழில் நியாயசபை, பிணக்குக்கான திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்கியதன் பின்னர், அத்தகைய இணக்கத்தீர்வுக்கிணங்க —

(அ) நீதிமன்றமொன்றினாலான ஆற்றுப்படுத்துகையொன்றின் விடயத்தில் தீர்வையொன்றைப் பதிதல் வேண்டும் : அல்லது

(ஆ) தொழில் நியாயசபையொன்றினாலான ஆற்றுப்படுத்துகையின் விடயத்தில் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

இணக்கத்தீர்வுக்கு வர இயலாத விடத்து.

**14.** பிணக்குக்கான திறத்தவர்கள் இணக்கத்தீர்வுக்கு உடன்படாதவிடத்து, சபையானது —

(அ) பிரிவு 7 இதன்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கொன்றின் விடயத்தில், அத்தகைய பிணக்கு அத்தகைய சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள

தெனவும் மத்தியஸ்தமூலம் பிணக்கைத் தீர்த்துவைக்க இயலாதுள்ளதெனவும் கூறுவதும், அவ்வாறு இணக்கிவைக்க முடியாதுமைக்கான காரணங்களைக் கூறுவதும் பிரதான மத்தியஸ்தரால் கையொப்பமிடப்பட்டதுமான விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான இணக்கப்படாமை பற்றிய சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் ;

(ஆ) பிரிவு 9 இன்கீழ் இணக்கத்திற்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது தொழில் நியாயசபையினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கொன்றின் விடயத்தில், மத்தியஸ்தமூலம் பிணக்கைத் தீர்த்துவைக்க இயலாதுள்ளதென்பதோடு இணக்கிவைக்க முடியாமைக்கான காரணங்களை அதனகத்துக் கூறி பிரதான மத்தியஸ்தரால் கையொப்பமிடப்பட்டு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விடயத்திற்கேற்ப அத்தகைய நீதிமன்றத்திற்கு அல்லது தொழில் நியாயசபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

சபை செயலாற்ற வேண்டிய காலவெல்லை.

**15.** (1) சபையானது, மத்தியஸ்தத்தின்மூலம் இணக்கித்தீர்க்கப்படுவதற்கென அதன் முன்னர் கொணரப்பட்ட ஒவ்வொரு பிணக்குத் தொடர்பாகவும், 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அத்தகைய சபை அமைக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக, விடயத்துக்கேற்றாற்போல, அதன் கலந்தாராய்வுகளை நிறைவுபடுத்தி இணக்கத்தீர்வொன்றைக் கொண்டுவர அல்லது இணக்கப்படாமை பற்றிய சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) சபையினால் மத்தியஸ்த அமர்வு நடாத்தப்படுவதில் அவதானிக்கப்படவேண்டிய நடைமுறை விதிந்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

உறுப்பினர்கள் நடத்தைக் கோவைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருத்தல்.

**16.** மத்தியஸ்த அமர்வை நடாத்தும்போது சபையொன்றின் உறுப்பினர்கள் விதித்துரைக்கப்படவேண்டியவாறான நடத்தைக் கோவைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இணக்கத் தீர்வுக்கு இணங்கியொழுகத் தவறுதல் அல்லது அதனை மீறுதல்.

**17.** (1) ஏழாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைப் பின்பற்றி சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கு தீர்த்துவைக்கப்பட்டுள்ளவிடத்தும் இணக்கத்தீர்வுக்கான திறத்தவர்களுள் ஒருவர் அதன் பின்னர் எந்நேரத்திலேனும் அத்தகைய இணக்கத்தீர்வுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்தும் அல்லது அத்தகைய இணக்கத்

தீர்வின் நியதிகளை மீறுகின்றவிடத்தும், மற்றத் திறத்தவர் உடனடியாக விடயத்திற்கேற்ப அத்தகைய தவறுகை பற்றி அல்லது மீறுகை பற்றி சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சமுகமாயிருக்குமாறு இணக்கத்தீர்வுக்கான திறத்தவர்களுக்கும் அது அவசியமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களுக்கும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கிடையே எழுந்திருக்கக்கூடிய எவையேனும் கருத்துவேறுபாடுகளைத் தீர்த்துவைப்பதற்குப் பெருமுயற்சி எடுத்தல் வேண்டும் என்பதுடன் புதிய இணக்கத்தீர்வொன்றைச் செய்துகொள்ள அவர்களுக்கு உதவுதலும் வேண்டும். அத்தகைய கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவைக்க முடியாதவிடத்து, அத்தகைய பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கு இயலாதுள்ளதென்பதோடு இணக்கிவைக்க முடியாமைக்கான காரணங்களைக் கூறி, பிரதான மத்தியஸ்தரால் கையொப்பமிடப்பட்ட, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான இணக்கப்படாமை பற்றிய சான்றிதழொன்றைச் சபை வழங்குதல் வேண்டும்.

இணக்கப்படாமை பற்றிய சான்றிதழ்கள் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படற்பாலனவாதல்.

**18.** (1) பதினாலாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுவதும் பிரதான மத்தியஸ்தரினால் கையொப்பமிடப்பட்டதுமான இணக்கப்படாமை பற்றிய சான்றிதழொன்று, அத்தகைய ஆள் சாட்சிக்காரர் ஒருவராக அழைக்கப்படாவிடினுங்கூட, ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது நடவடிக்கையில் சான்றாகக் காண்பிக்கப்படலாம்.

(2) இணக்கப்படாமை பற்றிய சான்றிதழ் ஒன்றின் மீதான கையொப்பம் உண்மையானதெனவும் அதனை ஒப்பமிட்ட ஆள் அதனை ஒப்பமிட்ட நேரத்தில் வகிப்பதாக உரிமை கொண்டாடிய பதவியை அவர் வகித்தார் எனவும் நீதிமன்றம் ஊகிக்கலாம் :

ஆயின், எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மீது அல்லது வேறுவகையாகவும் பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காகவும் பிரதான மத்தியஸ்தர் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னரான எவையேனும் வழக்கு

நடவடிக்கைகளில் சான்று கொடுப்பதற்கு சமுகந்தரவேண்டுமென நீதிமன்றம் ஏதேனும் விடயத்தில் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய பிரதான மத்தியஸ்தர் அத்தகைய சான்றிதழில் ஒப்பமிட்டமை தொடர்பாக மாத்திரம் சான்றுகொடுக்கும் நோக்கத்துக்காக சாட்சிக்காரர் ஒருவராகக் கட்டளையிட்டழைக்கப்படுதல் வேண்டும்.

19. சட்டத்தரணி, முகவர் அல்லது வேறு ஆள் எவரும் சபை முன்னரான ஏதேனும் விடயத்தில் பிணக்குக்கான எவரேனும் திறத்வரின் சார்பில் தோற்றுவதற்கு உரித்துடையவராகார் அல்லது அனுமதிக்கப்படுதலாகாது : பிரதிநிதித்துவப்படுத்தல்

ஆயின் எவ்வாறாயினும், சபை முன்னர் —

(அ) ஒரு வாழ்க்கைத்துணை மற்ற வாழ்க்கைத்துணையினால் ; அல்லது

(ஆ) பராயமடையாதவர் அல்லது ஏதேனும் இயலாமையின் கீழுள்ள வேறு ஆள், அவரது பெற்றோர், பாதுகாவலர் அல்லது காப்பாளர் என்பவரினால்

பிரதிநிதித்துவஞ் செய்யப்படுதல் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

20. (1) சபை முன்னர் கூற்றொன்றைச் செய்கின்ற ஒவ்வோராளும் அத்தகைய கூற்றுத் தொடர்பாக, அத்தகைய கூற்று தொடர்பில் நீதிமன்றத்தின் முன்னர் கூற்று கொடுக்கும் சாட்சிக்காரர் ஒருவர் உரித்துடைய எல்லாச் சிறப்புரிமைகளுக்கும், உரித்துடையவராதல் வேண்டும். சாட்சிக்காரர் களுக்குள்ள சிறப்புரிமைகள்.

(2) சபை முன்னர் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கூற்று எதுவும் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் ஆகாது.

21. ஏதேனும் வழக்குக் காரணம் தொடர்பில் ஆட்சி வரையறைக் காலப்பகுதியைக் கணிப்பதில், அத்தகைய வழக்குக் காரணமாக அமையும் பிணக்குத் தொடர்பாக குழாத்தின் தவிசாளருக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத் தேதியன்று தொடங்கி அத்தகைய பிணக்குத் தொடர்பாக ஆட்சி வரையறை.

14 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழின் தேதியன்று முடிவடையும் காலப்பகுதி, வேறு எதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.

கிராமசேவை உத்தியோகத்தர் சபைக்கு உதவியளித்தல்.

**22.** சபை 11 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழும் 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழும் அதன் கடமைகளைக் கொண்டுநடாத்துகையில், பிணக்குக்கான எவரேனும் திறத்தவருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏதேனும் அறிவித்தலைத் தெரிவிப்பதற்கு, விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்குள்ள கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுக்கென நியமிக்கப்பட்ட எவரேனும் கிராமசேவை உத்தியோகத்தரின் உதவியைத் தேவைப்படுத்தலாம் : அத்துடன் அத்தகைய கிராமசேவை உத்தியோகத்தர், அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது, அது தொடர்பாக அத்தகைய சபைக்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய உதவிகள் எல்லாவற்றையும் வழங்குதல் வேண்டும்.

சபை உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

**23.** இச்சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஒவ்வொரு சபையினதும் உறுப்பினர்கள், அத்தகைய உறுப்பினர்களாக அவர்கள் செயலாற்றும் வரைக்கும், தண்டனைச் சட்டக் கோவையின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்: அத்துடன் அத்தகைய சபை முன்னரான வழக்குநடவடிக்கை ஒவ்வொன்றும் அச்சட்டக் கோவையின் பொருளுக்குட்பட நீதித்துறை நடவடிக்கையாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபை அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

**24.** இச்சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஒவ்வொரு சபையும் இலஞ்சச் சட்டத்தின பொருளுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

சபையின் அமைப்பில் உள்ள குறைபாடு சபையின் செயல்களையும் நடவடிக்கைகளையும் செல்லுபடியற்றதாக்காது.

**25.** சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், சபையின் அமைப்பில் உள்ள குறைபாடு காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்குவதாகக் கருதப்படுதல் ஆகாது.

மத்தியஸ்த உடன்படிக்கையொன்று இருக்குமிடத்து, இணக்கப்படாமை பற்றிப் போதிய எண்பிப்பின்றி வழக்கெதுவும் தொடுக்கப்படலாகாது.

**26.** (1) ஏதேனும் பிணக்கை இணக்கத்துக்காக ஆற்றுப் படுத்துவதற்கு மத்தியஸ்த உடன்படிக்கை ஒன்றின்கீழ் திறத்தவர்கள் உடன்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய பிணக்கு, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகுதியினவான பிணக்குகளினுள் வருகின்ற ஒரு பிணக்காக உள்ளவிடத்தும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய பிணக்குத் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் எவையும், அத்தகைய பிணக்கு மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு இணக்கமொன்றைச் செய்வதற்கு இயலாதிருந்ததென்ற பொருள்பட போதிய ஆவண முறையான எண்பிப்பு சமர்ப்பிக்கப்பட்டாலொழிய, தொடுக்கப்படுதலோ அல்லது நீதிமன்றமொன்றினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குக்கான திறத்தவர் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் V ஆம் பாகத்தின்கீழ் ஏதேனும் தற்காலிகப் பரிகாரம் என்ற வடிவத்திலான நிவாரணத்துக்காக வேண்டுமிடத்து, ஏதேனும் வழக்குத் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது என்பதுடன், அத்தகைய வழக்கு அத்தகைய தற்காலிகப் பரிகாரத்தை அளிக்கின்றமை தொடர்பான அளவுவரை மட்டுமே நீதிமன்றமொன்று அத்தகைய வழக்கு நடவடிக்கையை ஏற்றுக் கவனித்துத் தீர்மானிக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, மத்தியஸ்த உடன்படிக்கையொன்று, ஒப்பந்த முறையிலான அல்லது வேறுவகையான வரையறுக்கப்பட்ட சட்ட உறவு முறை தொடர்பில், திறத்தவர்களிடையே எழக்கூடிய எல்லாப் பிணக்குகளையும் அல்லது ஏதேனும் பிணக்கை ஓர் ஒப்பந்தத்திலான எந்த மத்தியஸ்த வாசகத்தின்மூலம் அல்லது தனிவேறான ஓர் உடன்படிக்கையின்மூலம் மத்தியஸ்தத்தினால் இணக்கத்துக்காக ஆற்றுப்படுத்துவதற்குத் திறத்தவர்கள் உடன்படுகின்றனரோ அந்த ஒப்பந்தத்திலான மத்தியஸ்த வாசகத்தின் வடிவத்தில் அல்லது தனிவேறான உடன்படிக்கை என்ற வடிவத்தில் இருக்கலாம்.

ஒழுங்குவிதிகள்.

**27.** (1) இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்க வருதலும் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டிய தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**29.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, "மத்தியஸ்த சபை ஆணைக்குழு" என்பது, 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மத்தியஸ்த சபை ஆணைக்குழு என்று பொருளாகும்.

## அட்டவணை

(பிரிவு 4 (1))

1. ஆணைக்குழுவானது 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் விதித்துரைக்கப்படும்வாறான அத்தகைய தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்; அத்துடன் குழாத்தின் உறுப்பினர்களாக அவர்களை நியமிக்கும் முன்னதாக, மத்தியஸ்த திறன்களிலும் தொழில்நுட்பங்களிலும் பூர்வாங்கப் பயிற்சிநெறியைப் பின்பற்றுவதற்காக அத்தகைய ஆட்களை அனுப்புதல் வேண்டும்.

2. ஓராம் விடயத்தில் குறிப்பிடுசெய்யப்பட்ட பூர்வாங்கப் பயிற்சி முடிவடைந்ததன் பின்னர், பயிற்சிநெறியை நடாத்திய ஆள் அல்லது ஆட்கள் அப்பயிற்சிநெறியைப் பின்பற்றிய ஆட்கள் ஒவ்வொருவர் தொடர்பாகவும் அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கை, மத்தியஸ்தராகப் பணிபுரிவதற்குப் பயிற்சியாளருக்குள்ள உளச்சார்பு, அறிவு மற்றும் திறன்கள் பற்றிக் கருத்துரை செய்தல் வேண்டும்.

3. இரண்டாம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஆணைக்குழு, அத்தகைய அறிக்கைகள் ஒவ்வொன்றினதும் உள்ளடக்கங்களைப் பரிசீலனைசெய்து, ஒவ்வொரு விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கும் —

(அ) பன்னிரண்டு பேர்களுக்குக் குறையாத மத்தியஸ்தர் குழாம் ஒன்றையும் ;

(ஆ) காலத்துக்குக்காலம் அவசியமெனக் கருதப்படக் கூடியவாறான அத்தகைய ஏதேனும் குழாத்துக்கு அத்தகைய எண்ணிக்கையினரான மேலதிக உறுப்பினர்களையும் ;

(இ) குழாத்திலுள்ள எவையேனும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும்,

நியமித்தல் வேண்டும்.

4. (1) அவரது பதவிக்காலம் முடிவடைவதன்மீது அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகப் பதவியை வறிதாக்கும் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அவர் பதவியை வறிதாக்கும் தேதியன்று ஏதேனும் பிணக்கை விசாரித்துக்கொண்டிருக்குமிடத்து, அவர் பதவியை வறிதாக்கும் காலம் அவர் விசாரணையை முடிவுறுத்துகின்ற தேதி யன்று பயனுடையதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் காரணத்துக்காக, அவரது பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரின் இடத்துக்குப் பின்னுரிமையாளராக ஆள் எவரும் நியமிக்கப்படாதவிடத்து, வெளிச்செல்லும் உறுப்பினர் அவர்

பதவியை வறிதாக்குவது எப்படியிருப்பினும், அவரை அடுத்துறுபவர் நியமிக்கப்படும்வரை அல்லது ஆணைக்குழு வேறுவகையாகத் தீர்மானிக்கும்வரை, குழாத்தின் உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

5. (1) தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் –

(அ) ஆணைக்குழுவுக்கு முகவரியிட்ட கடிதம் மூலம் அவரது பதவியை விலகலாம் ;

(ஆ) அதற்கான காரணம் எதுவும் குறித்துரைக்காமல் ஆணைக்குழுவினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.